**<u>O.S. 82/2016, 01.04.2021, 11.40 am - 11.45 am</u>**

**வா.சா.1, மாணிக்கம், த/பெ.லேட்.முனிசாமி**

**<u>முதல் விசாரணை:-</u>**

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, தும்பேரி கிராமம் மற்றும் அஞ்சல், கூட்டுரோடில் வசிக்கும், இந்து, விவசாயம், லேட்.முனிசாமி குமாரர் 58 வயதான M.மாணிக்கம் ஆகிய நான் சத்தியபிரமாணமாய் கூறுவதாவது.

சத்தியமாக சொல்கிறேன். என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். 27.12.1999 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகும். 10.07.2015 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள தாவா கணினி பட்டா வா.சா.ஆ.2 ஆகும். 10.07.2015 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள 'அ' பதிவேடு வா.சா.ஆ.3 ஆகும். புல எண்.165ன் வரைபடம் வா.சா.ஆ.4 ஆகும். தாவாவிற்கான நில ரசீதுகள் எண்ணிக்கை 4 வா.சா.ஆ.5 ஆகும். மாவட்ட ஆட்சியர் அலுவலக ஒப்புகை எண்ணிக்கை 2 வா.சா.ஆ.6 ஆகும். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக ஒப்புகை எண்ணிக்கை 2 வா.சா.ஆ.7 ஆகும். சர்வே எண்.165/1பிக்கு பிரதிவாதி மற்றும் மகள்களின் பெயரில் உள்ள கூட்டு சிட்டா வா.சா.ஆ.8 ஆகும். தாவாப்படி தீர்ப்பாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.